# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1864/61- 2014 මැයි මස 30 වැනි සිකුරාදා - 2014.05.30

1864/61 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: தெஹி/2-1/அத்/743 ( ஏ) (2)

2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதிய 1813/18ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில், துடுகெமுனு கிராமத்தில் நிலஅளவையாளரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல.கொ.520802 மற்றும் 2013.02.26 ஆம் திகதியின் தொகுதி இல. 02 இல் துண்டு இல. 232 கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.

**01. துண்டு இல. 232:**

காணியின் பெயர்: வெரெல்லகஹவத்த மற்றும் கிரிபெல்லகமவத்த, வரிமதிப்பீட்டு இல. 181ஏ, துடுகெமுனு வீதி; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி ஒன்று காணப்படுகின்றது; உரிமை கோருபவர்:அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ருக்மனீ சீமதி த அல்விஸ், இல. 181/ஏ,துடுகெமுனு வீதி, கொஹுவெல; விஸ்தீரணம்: 0.0144 ஹெக்டயார்.

கே. சம்பா என்.பெரேரா,
பிரதேச செயலாளர்,
தெஹிவளை.

பிரதேச செயலகம்,
தெஹிவளை,
2014, மே 28.

06-453/1

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: தெஹி/2-1/அத்/743 ( ஏ) (2)

2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிய 1816/23ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில், துடுகெமுனு கிராமத்தில் நிலஅளவையாளரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கொ. 9287 மற்றும் 2013.03.20 ஆம் திகதியின் தொகுதி இல. 03 இல் துண்டு இல. 232 கீழ் வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.

**01. துண்டு இல. 03:**

காணியின் பெயர்: வரி மதிப்பீட்டு இல. 12, துடுகெமுனு வீதி; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி ஒன்று காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஜீ.வர்ஸவிதான, இல. 12, துடுகெமுனு வீதி, கொஹுவெல; விஸ்தீரணம்: 0.0049 ஹெக்டயார்.

கே.சம்பா என்.பெரேரா,
பிரதேச செயலாளர்,
தெஹிவளை.

பிரதேச செயலகம்,
தெஹிவளை,
2014, மே 28.

06-453/2

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 1/8/3/41அத்
காணிஅமைச்சின்தொடர்இல:4/3/10/2012 /எல்ஆர்பி/277

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியின் ஆட்சி உரிமையை எடுத்துக் கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

நிலசீர்த்திருத்தம் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பொது நோக்கத்திற்காக நாரேஹேன்பிட்டி பிரதேசத்தில் எலதுவ காணித்துண்டுகள் இல. 1,2,3 என்பவை சுவீகரிக்கப்படுகின்றன. மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் (பிரிவு இல. 41, கிருல கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்) நாராஹேன்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபதியினால் வரையப்பட்ட மு.பிரதி வரைபட இல. கொ.9437 உம் 2014/05/02 ஐ கொண்டமைந்த காணித்துண்டு 01 இன் விஸ்தீரணம் 0.1937 ஹெக்டேயர் மட்டும் ஆகும்.

**1. துண்டு இல. 01:**

காணியின் பெயர்: எலதுவ; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.1937ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியகாரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 10ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் ஆந் திகதிக்கு முன் எழுத்தில் முப் பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விசாரணைகளின் போது உரிமையையும் வேண்டிய ஆவணங்களையும் என்முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

கீதாமணி சி.கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
திம்பிரிகஸ்யாய.

பிரதேச செயலகம்,
திம்பிரிகஸ்யாய,
2014, மே 28.

06 - 454

பிழை திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: பிசெப/இ/1/2/8

இல. 1103/13, 1999.10.27 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆவது பிரிவு அறிவித்தல் இல. 1509/6 2007.08.07 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. மேல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டிலும் 7ஆவது பிரிவின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் பின்வருமாரு திருத்தப்பட வேண்டும் என்பதை அறிவிக்கின்றோம்.

இல. 1103/13, 1999.10.27 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் அறிவித்தலினுள் வெளியிடப்பட்ட 7ஆவது பிரிவின் படி மு.பி.ர/188 இன் காணித் துண்டு இல. 01 பிரமாணத்தின் ஹெக்டயார் 0.6439 இன் வவேகுபுரஹேன எனும் வெவேவத்த காணியை மீண்டும் அளந்து புதிய பத்திரிகை தயாரித்து புதிய இலக்கங்களையிட்டு தயாரித்த பத்திரிகையின் காணி இல. 02 ஐயும், 04ஐயும் கைப்பற்றும் காணியாக காண்பிக்கப்பட்டள்ளது. புதிதாக்கப்பட்ட மு.பி.ர/188 துண்டு இல. 02 இன் பிரமாணம் 0.0215 ஹெக்டயாரும் துண்டு இல. 04 இன் பிரமாணம் 0.0040 ஹெக்டயாரும் ஆகும் என்பதை தெரிவிக்கின்றேன்.

அப்படியே இல. 1103/13, 1999.10.27ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்ட 7ஆவது பிரிவின் படி குறிப்பிடப்பட்டுள்ள அ.க.பி. 298 வெவேகுபுரஹேன ஆகிய வெவேவத்த காணியை மீண்டும் அளந்து புதிய பத்திரிகை தயாரித்து புதிய இலக்கமிடப்பட்டுள்ளது. அதில் துண்டு இல. 592 ஐ கைப்பற்றும் காணியாக காண்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக்கப்பட்ட அ.க.பி/298 மேலதிக 26 பத்திரிகையின் காணித்துண்டு இல. 592 னுடைய பிரமாணம் 0.2089 ஹெக்டயார் ஆகும்.

சம்பிக நிரோஸ் தர்மபால
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை .

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2014, மே 28.

06 - 455

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.